# Sub Court, Eraniel

C.O.S. No.1/2025
Date:23.03.2026.
PW1- திரு. வின்சென்ட் ஜார்ஜ்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

மனுவின் பெயரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்காக, போலியாக தயார் செய்யப்பட்டவை என்றால், சரியல்ல. நான் கட்டிட வேலையை நிறுத்திய போது, அங்கு சிமெண்ட் முதலான கட்டுமானப் பொருட்கள் அங்கு இருந்ததாக நான் தவறுதலாக குறிப்பிடுகிறேன் என்றாலும், அவ்வாறு சிமெண்ட் மற்றும் கட்டுமானப் பொருட்களை அங்கிருந்து எடுத்து சென்று விட்டேன் என்றாலும், சரியல்ல. சிமெண்ட் மற்றும் கட்டுமானப் பொருட்கள் அங்கு இருந்ததாக நான் மதிப்பீடு செய்துள்ளது உண்மைக்கு புறம்பானது என்றால், சரியல்ல. கட்டிட மதிப்பீடு சான்றிதழ் நானும், வா.சா.4 ம் சேர்ந்து தவறுதலாக வழக்கிற்காக தயார் செய்திருக்கிறோம் என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.40 Statement of Accounts ல் உள்ள 37 பில்களும், வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றால், சரியல்ல. வா.சா.ஆ.15 Assessment Report உண்மையானது அல்ல என்றால், சரியல்ல. அதனுடைய நகல் பிரதிவாதிக்கும் கொடுக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.